# நாரணன் நாற்பது



இரண்டு மந்திரங்களின் உட்பொருளானவனே!
மிரண்டுபோனான் அரியாகக் கண்ட இரணியனுமே!
திரண்டுவந்த வெண்ணையை அள்ளி வுண்டதனாலே- தாயும்
21 அரண்டுபோனாள் கெட்டுவிடும் உன் வயிறென்றே!

வயிறு நிரம்ப ஏழுலகும் உண்டு மகிழ்ந்தாய்
தயிறுதனை நண்பர்களுடன் அள்ளி உண்டாய்
கயிறதனால் கட்டுண்டு நீயும் கிடந்தாய் - குறளாகி
22 உயிறுடனே வதைக்க மாவலியின் தலையில் கால் வைத்தாய்.

இயற்றியவர் : "பொய்கையடியான்"

கால்வைத்து தேரினை அழுத்தி விசயனைக் காத்தாய்
கோல்கொண்டு ஆயனாகி ஆனிரை மேய்த்தாய்
தோள்களில் சுமந்தான் போர்தனில் உனை அனுமனுமே- நின்
23 தாள்களை சரணடைந்தவரைக் காத்தாய் இராமனாகி!

இராமனாகி போதித்தாய் ஒருவனுக்கு ஒருத்தியென்று
மராமரங்கள் ஏழும் சாய்த்துக் காட்டினாய் வீரனென்று
தராதரம் பாராமல் ஏற்றாய் அனைவரையும் சோதரென்று-நீயும்
24 புறாவிற்கு அருள்புரிந்தாய் அது உனைச் சரணடைந்ததென்று!

சரணடைந்தவரைக் காப்பதைக் கருத்தில் கொண்டு
அரண் போன்று என்றும் அவர்களைக் காத்திடும் திருமாலே
அரண் அதில் முனிவனின் யாகம் செவ்வனே முடிய – நீயும்
25 அரண் போன்று நின்று காத்தாய் தம்பியுடன் பங்கமற !

பங்கமற பாலகன் கூற்றைக் காத்திடவே நீயும் மெல்ல
அங்கம் சிலிர்க்க தூணதைப் பிளந்தாய் அரக்கனைக்கொல்ல
சிங்க வுருவுடன் அன்று வெளிவந்த திருமாலே! - திருமகளின்
26 தங்கம் போன்ற திருமேனி உன்மீது மின்னுகின்றதே!

மின்னுவதெல்லாம் பொன்னென்று எண்ணிடு மாந்தர்
எதைத்தின்றால் பித்தம் தெளியுமென்ற நிலையினிலே
உன்னுடைய பெருமைகளை உணராதவராய் வீணே - மயங்கி
27 எதையெதையோ தெய்வமென வீழ்கின்றனர் அதன் வலைதனிலே !

வலையில் விழுந்த பூச்சிகளின் நிலையைப்போன்று
வெளியில் வரமுடியாமல் மீண்டும்மீண்டும் அவர்கள்
நிலையில்லா அந்த தேவர்களின் பலனைக் கருதி -- மனத்
28 தெளிவில்லாமல் இவ்வுலகில் உழல்கின்றனரே!

உழல்கின்ற அந்த மாந்தரைக் காத்திடவே
ஆழ்கடலில் பள்ளிகொண்ட பரமனே உன்
கழல் அணிந்த பாதங்களை உறுதியுடன் பற்றிட – உலகில்
29 ஆழ்வார்கள் பன்னிருவர் அவதரித்தனரே.

அவதரித்தாய் இராமனாய் அனைவரையும் காத்திடவே
கவர்ந்தாய் சீதையின் மனதினை வில் முறித்தே
கவர நினைத்து உன்னை நெருங்கினாள் சூர்ப்பனகையுமே - பின்பு
30 அவமானப்பட்டு அங்கிருந்து எடுத்தாள் ஓட்டமுமே

ஓட்டப்பந்தயத்தில் வெற்றிக்கம்பத்தைத் தொடுபவன்போன்று
செய்த பாவங்கள் முண்டியடித்து முன்னுக்கு வருகின்றன
ஆட்டப்பலகையில் தோற்ற காய்களைப் போன்று -- காட்டில்
31 பெய்த மழையாக என் புண்ணியங்கள் வீழ்ந்தனவே.

வீழ்ந்த காய்கள் பாண்டவருக்கு எதிராக வீழ்ந்திட
தாழ்ந்த தலையுடன் அந்த ஐவரும் பார்த்திருக்க
காழ்ப்புணர்வுடன் துரியோதனனும் அவர்களை நோக்கிட - பாஞ்சாலி
32 வீழ்ந்தாள் சபைதனில் உனைச் சரணென்று கரம் கூப்பியே!

கரம்கூப்பித் தொழுவாரைக் காத்திடும் திருமாலே!
வரம் காக்க தேவியுடன் கானகம் செல்ல, மர
உரி தரித்துத் தம்பியும் பின்தொடரச் சென்றவனே - தந்தை
33 தெரியாமல் முனிகுமாரனைக் கொன்றதால் வேட்டையிலே!

வேட்டைக்குச் சென்ற அரச குமாரன் வழிதவறியே
காட்டைப் புகலிடமாகக் கொண்ட வேடுவருடன் சேர்ந்து
நாட்டை மறந்து மணிமகுடம் இழந்து அவர்களுடனே -- தனது
34 பாட்டை மாறி வாழ்ந்து வந்தான் தன் நிலை மறந்தே.

நிலைமறந்து வாழ்ந்த அந்த பாலகனைப் போன்று
நிலையான உன்னொருவனை என்றும் நினையாது
நிலையற்ற மனத்துடன் வாழ்ந்துவந்த அடியேனையும் -- இன்று
35 நிலையாக நின்பாதங்கள் பற்றச் செய்தார் எம் குருவுமே!

குருவின் இலக்கணம் சீடனைக் காப்பதென்றே
குரு சுக்கிரனும் மாவலியைக் காத்திட நினைத்தே
உரு எடுத்து வண்டாகி நீர்வரும் துளையடைக்க – செருக்கால்
36 உரு தெரியாமல் மண்ணில் மறைந்தான் முழுவதுமாக!

முழுவதுமாக பூசணியைச் சோற்றில் மறைப்பார்போன்று
முழுமுதல் இறைவனான உன் தன் பெருமைகளையும்
முழுதும் உணராத சில மதத்தினர் இவ்வுலகினிலே -- உன் தனை
37 முழுமையாக மறைக்கப் பார்க்கின்றனர் அறிவிழந்தே!

அறிவிழந்து தசமுகன் விழைந்தான் பிறன்மனையே
அறிவிழந்த இரணியனும் பகைத்தான் உன் தனையே
அறிவிழந்து மாவலியும் தந்தான் மூவடிமண் தனையே - உலகில்
38 அறிவிழந்தவர் அடையும் முடிவை இவர் அடைந்தனரே!

அடைவர் உனைச் சரணென்று அடைந்தவர் முக்திதனையே
உடையவரும் போதித்தார் சரணாகதி வழிதனையே
விடையாகக் கிடைத்தது அதனை எளிதில் அடைந்திடவே - முடிவில்
39 அடையவேண்டும் அந்த ஆதியந்தமிலாதவனையே!

ஆதியந்தம் இலாதவன் நீயொருவனே என்றதனால்
ஆதிசங்கரரும் உன் தனையே தொழுதெழுந்தார்
விரிவுரை செய்து மகிழ்ந்தார் உன் ஆயிர நாமங்களுக்கே -- பின்பு
40 ஹரியே! உனை தியானித்து பின் முக்தியும் அடைந்தார் !

பொய்கையில் தோன்றி வையம் தகளியாயென்ற
பொய்கைப்பிரான் திருவடியைப் பற்றியிப்
பொய்கையடியான் சொல்லும் பாடல் கற்றவர்
பொய்க்காமல் வைகுந்தம் எய்துவர்தாமே!

